

# தர்மபோதினி.

தர்மபுரி என்னும் தலத்தினின்றும் மாதந்தோறும்
வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.

" செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம், அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை "—திருக்குறள்.


தொகுதி 1 } Vol 1 }

இரக்தாக்ஷி-ஸு ஆனி-மீ
JUNE 1924.

{ பகுதி 3 { No. 3


உள்ளுறை பக்கம்.


தெய்வ வணக்கம் .... .... .... 65
சேலம் ஜில்லாவின் தற்காலநிலைமை II .... 66
கம்பர் கவிநயம் .... .... .... 71
மணம் .... .... .... 74
குழந்தைகளுக்கு ஆகாரங்கொடுத்தல் .... 77
சில புண்ய க்ஷேத்திரங்கள் .... .... 87
தூய்மை .... .... .... 90
8. தனிக் கவித்திரட்டு .... .... .... 93
9. ஹாஸ்யத் தொகுதிகள் .... .... 94
10. காலஞ்சென்ற P. சுந்திரம்பிள்ளை
11. மதிப்புரை ....



சஞ்சீவி அச்சுக்கூ

ஜீவிய ச...

நமது போதினியை அபிமானித்த... முன் வந்த அடியிற்கண்ட தனவா... செலுத்துகிறோம்.

ஸ்ரீமான் D. A, கந்தசாமி செட்டியாரவர்கள்
,, M. G. நடேச செட்டியாரவர்கள்
,, P. R. அச்சுதய்யரவர்கள்
,, டாக்டர் C. R. வெங்கட்நாராயணய்யரவர்கள் L. M...
,, ,, S R.A. செல்லம் அவர்கள் அசிஸ்டெண்ட்...
,, கேசவலு நாயுடு அவர்கள்

## சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

(1) சந்தாதாரராகச் சேர விரும்புவோர் சந்தாவை... ஆர்டர் மூலமாக அனுப்பி சஞ்சிகையைப் பெருவது உசித...

(2) இடமாறுதல்களை உடனுக்குடனே பத்திராதி... தெரிவித்துக்கொண்டால் சஞ்சிகையை அவ்விலாசத்திற்க... படும்.

(3) கடிதமெழுதும்போது அவர்களுடைய சந்தா... பரையும் அதில் குறிப்பதுடன் பதிலை எதிர்பார்ப்போர் கார்டு எழுதவேண்டும்.

(5) 12 சந்தாதாரர்களை சேர்த்துக்கொடுக்கும் நேய...க்கு ஒரு வருஷத்திய சஞ்சிகை இனாமாக அனுப்பிவரப்படு...

பத்திரா...

# "தர்மபோதினி"

ஏஜெண்டுகள் தேவை! தகுந்த கமி... கொடுக்கப்ப...

தெய்வபக்தி, நல்லுணர்ச்சி, கல்வி, நாகரீகம், ச... ஆராய்ச்சி, இயற்கை ஞானம் ஆகிய அருமையான வி... களடங்கிய ஓர் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை. சந்தா... யை முன்பணமாக அனுப்பவேண்டும். அல்லது வி.பி. மூ... முதல் சஞ்சிகையை ஒரு வருஷ சந்தாவைச்செலுத்தி... வேண்டும். வருஷ சந்தாவை மணிஆர்டர்செய்து பத்திரி... தருவித்துக்கொள்வது லாபகரமானது.

வி. பி. செலவு பிரத்யேகம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள்ளூர் வாசிகளுக்கு வருஷ சந்தா | | ரூ. | 1 | 4 | 0 |
| வெளியூர் வாசிகளுக்கு | ,, | ,, | 1 | 8 | 0 |
| வெளிநாடுகளுக்கு .... | ,, | ,, | 2 | 8 | 0 |
| தனிப்பிரதி | .... | ,, | 0 | 3 | 0 |
| [illegible] | .... | ,, | 25 | 0 | 0 |

...த்திராதிபர், தர்மபோதினி, தர்மபுரி.



உ

கடவுள் துணை.

# தர்மபோதினி.

தெய்வபக்தி, நல்லுணர்வு, கல்வி, நாகரீகம், இயற்கை தத்துவங்கள், சரித்திர ஆராய்ச்சி, இலக்கண இலக்கிய நுட்பங்கள், முதலியவற்றுடன் வெளிவந்துலாவும் ஓர் உயர்ந்த மாதாந்த தமிழ்ப்பத்திரிகை.


| | | |
|---|---|---|
| தொகுதி 1<br>**Vol 1** | இரக்தாக்ஷி-௵ ஆனி-மீ<br>**JUNE 1924.** | பகுதி ௩<br>**No. 3** |


## ஸ்ரீ கணேசர்துதி.

சுரதுலர்திபன் றூய்மலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளுந் தலைக்கணி யாக்துவாம்

(சிவப்பிரகாசர்)

குனித்த புருவமுங் கோவ்வைச்சேவ்
[வாயிற் குமிழ்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
[பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுங்
[காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே?
[இந்த மாநிலத்தே

(தேவாரம்)

## சேலம் ஜில்லாவின் தற்கால நிலைமை

ஒரு தேசத்தின் பெருமை அதன் பொருளாதார நிலைமையே. அந்நிலைமைக்கடிப்படையாய் இருப்பது அந்நாட்டினரின் தொழில்களே. தொழில்கள் நாட்டின் இயற்கையமைப்பையும் ஜனங்களின் சுவபாவத்தையும் பொருத்ததாய் இருக்கிறது. விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய எல்லாம் அதற்கான வசதிகள் சரிவர இருந்து அவ்வசதிகளை ஏற்றவாறு உபயோகப்படுத்தினலல்லாது விருத்தி அடையாது. இயற்கையும் செயற்கையும் சேர்ந்தே தேசத்திற்கு மதிப்புண்டாக்கு... ஆதலின் எந்த தேசமும் மேம்பாடடைவதற்கு இயற்கை... கை பெருள்கள் இன்றியமையாததாகின்றது. இவ்வி... சில அம்சங்களை இவ்வியாசத்தில் (முன் சஞ்சிகை... வாறு) தற்சமயம் நமது ஜில்லாவைப் பொருத்தமட்ட... துப்பார்ப்போம்.

விவசாயமானது பூசாரம், பாய்ச்சலாதார... குடிகளின் உழைப்பு முதலியவற்றை அனுசரி... நிலம் 100-க்கு 7 பங்கு நஞ்சையும், 93 பங்கு புஞ்... கிறது. சகலவித பயிர்களும் பயிரிடப்பட்டுவருகி... பயிர்கள் விளைவதற்கான மண்களும் நிறைந்திருக்கிற... தொகையில் ஏறக்குறைய 100-க்கு 71-க்கு மேல் விவசாயத்தை... யும் 13 பேர் கைத்தொழிலையும் 6 பேர் வர்த்தகத்தையும் 10 பேர் மற்ற வேலைகளையும் நம்பி இருப்பவர்கள்.

முன்பு இருந்ததை விட இப்போது விளைபொருள்கள் போதிய அளவு விருத்தி அடைந்திருப்பதாக சொல்வதற்கில்லை. நமது அரசாங்கத்தார் கோயமுத்தூரில் புது விவசாய முறைகளை நமது நாட்டில் அனுஷ்டிக்கக்கற்றுக் கொடுப்பதற்காக விவசாய கலாசாலையை ஸ்தாபித்து நடத்திவருகின்றனர். நமது தேசத்தில் ஒவ்வொரு தொழிலும் ஒவ்வோர் குலத்தாரிடம் சிறப்புற விளங்கி விருத்தியாகிவந்த சம்பிரதாயம் இன்னும் மாறவில்லையாதலால் கலாசாலையில் பண்ணைத்தொழிற் பயிற்சிபெறுவதான புது வழியில் அநேகமாய் யாரும் செல்லவில்லை. கலாசாலைப்

பயிற்சி விசேஷமாய் ஆங்கிலப்படிப்புள்ளவர்களுக்கும் பணக்காரர்களுக்குமே ஏற்றதாயிருக்கிறது. மேலும் அப்படிப்பு பெற்றவர்கள் சுயவிவசாயத்தால் அம்முறைகளை பிறர் தழுவுமாறு அதன் மேன்மையை நிரூபிக்காது இதுவரை சர்க்கார் விவசாய இலாகா உத்யோகங்களிலேயே அநேகமாய் அமர்ந்திருக்கின்றனர். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு விவசாய பள்ளிக்கூடம் வைத்து நூதன விவசாய முறைகளையும், பல பயிர்களைப்பற்றிய முழுவிவரங்களையும் அனுபவத்துடன் தேசபாஷையில் சொற்ப செலவில் கற்றுக்கொடுத்தால் விவசாயம் விசேஷமாக விருத்தி பெறும் என்று நம்புகிறோம்.

சர்க்கார் இலாகா நோக்கப்படி விவசாய முறைகளைக் கைக்கொள்வதில் இருப்புக் கலப்பை முதலிய பண்ணைக்கருவிகளும், மீன் எரு முதலிய கம்பெனி உரங்களும், விதை முதலியனவும் சேர்ந்து முட்டுவளிச்செலவை அதிகரிக்கிறதென்பது சிலருடைய அபிப்பிராயம். பழயமாதிரிக் கருவிகளான நம் நாட்டுக் கலப்பை, களைக்கொத்து, மண்வெட்டி, அரிவாள் முதலியன சுலபமாயும் சொற்ப விலையிலேயும் கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது. குப்பை, சாணி முதலியவைகளை ஓர் குழியில் சேகரித்து வைத்து பின் எருவாக உபயோகிப்பதும், கால்நடை மந்தைகளை நிலங்களில் பட்டிபோட்டு வைப்பதும் புஞ்சைகளுக்கு உரம் கொடுக்கும்முறை. நஞ்சை நிலங்களுக்கு பச்சைத்தழைகளை சேற்றில் கலந்து உழுவது பழய வழக்கம். இவ்வித முறைகளால் அதிக செலவும் இல்லை, தேடும் சிரமும் இல்லை. இவைகளை அனுசரித்து நம்முன்னோர்கள் காலந்தவறா மழையின் அனுகூலத்தால் போதிய விளைவு பெற்றுவந்தனர்.

சரியான காலத்தில் இப்போது மழையில்லாமற்போனதால் புஞ்சை விளைவற்றுப்போனதன்றி நஞ்சை விளைவுங்குறைவாய் விட்டது. நஞ்சை நிலங்களெல்லாம் பெரும்பாலும் மழையால் நிரப்பப்படும் ஏரிகளையே ஆதாரமாகக்கொண்டன. மழைகாலத்தில் மட்டும் அநேகமாக ஜலம் ஓடப்பெற்ற காட்டாறுகளில் அணைகட்டி சிலஏரிகளுக்குவாய்க்கால்கள் திருப்பியிருக்கின்றனர்.

ஆற்று அணையினின்றும் வாய்க்கால்களால் நேர[illegible]ாய ப்பெறும் நிலங்கள் விசேஷமாக ஆத்தூர் தாலூகாவிலும் இதர இடங்களில் சொற்பமாகவும் உளது. இந்த ஆறுகளும் மழை இல்லாவிடில் பாசனத்திற்குப் போதுமான ஜலம் உடைத்தாயிராது. கிணறுகள் புஞ்சையில் விசேஷமாய் இருக்கிறதே தவிர மழைக் குறைவேற்படுங்காலத்து கஷ்ட நஷ்டமடையாதிருக்குமாறு உதவ நஞ்சைகளில் அதிகம் இல்லை. நிலங்களில் கிணறுகள் வெட்டியும் இன்னும் மற்ற சௌகர்யங்களுடனும் விவசாயஞ்செய்து நல்ல பலனை அடையத் தடையாய் இருப்பது குடிகளின் ஏழ்மையே. குடிகள் கடனாளிகளாகி தம் வரும்படியைக்கொண்டு ஜீவனம்செய்ய மிகுதி வட்டி கட்டத்தான் ஆகிறதேயொழிய அசலைக்கொடுக்க முடியாது தவிக்கிறார்கள். ஆனால் நம் ஜில்லாவில் ஐக்ய நாணயச்சங்கங்கள் கிராமங்களில் ஸ்தாபிக்கப்பட்டு குடிகள் சற்று சௌக்யமடைந்து வருகிறார்கள். விவசாயிகளுக்கென தனிப்பட்ட பாங்கிகள் விசேஷமாய் ஏற்படவில்லை. இனி விவசாயிகள் நிறைந்த பெரிய கிராமங்களில் பிரத்யேகமாய் இத்தகைய பாங்கிகள் ஏற்படுத்தி நாணயமாய் லேவாதேவி செய்து வந்தால் குடிகளுக்கு மெத்த அனுகூலங்கள் ஏற்படும். இவ்வியக்கத்தை சற்று ஊக்கமாய் நாம் பரவச்செய்தல் வேண்டும். விவசாயிகள் சென்னை சர்க்காரால் நிலங்களில் கிணர் வெட்டவும், மராமத்து செய்யவும், இன்னும் பண்ணைத்தொழில் அபிவிருத்திக்கான பல வசதிகளை செய்துகொள்ளவும் கொடுக்கும கடன்களைப்பெற்றும் சௌக்யமடையலாம்.

இருக்கிறதை விருத்திசெய்ய இத்தகைய பிரயத்தனங்கள் செய்வதன்றியில் புதிதாக இயற்கையில் நமக்கனுகூலமாக அமைந்திருக்கிற சில இடங்களில் தகுந்த பிரயத்தனஞ்செய்து சர்க்கார் ஒத்தாசையைக்கொண்டு புது பாய்ச்சலாதார வேலைகளைச் செய்யவேண்டும். கவர்ன்மெண்டார் யோசனையில் நெடுநாட்களாக இருந்துவரும் கிருஷ்ணகிரி தாலூகாவில் பெண்ணையாறு அணை, தர்மபுரி தாலூகா மாராண்டஹள்ளி அணையை விருத்தி செய்து சில பெரிய ஏரிகளுக்கு ஜல சப்ளை செய்தல், பூலாஹள்ளி ஆறு, தொப்பையாறு, ஊத்தங்கரை தாலூகா வாணியாறு ஆகிய

வைகளில் அணைகட்டுதல், ஆத்தூர் தாலூகா சரபங்கநதி சுவேத நதியால் சப்ளைசெய்யப்படும் பல ஏரி கால்வாய் முதலியவற்றில் மராமத்துகள் ஆகிய பல அடிப்படையான வேலைகள் இன்னும் செய்யவேண்டி இருக்கிறது. கவர்ன்மெண்டாரிடம் நமது குறைகளை அடுத்தடுத்து எடுத்துரைத்து சட்டசபையில் நம் பிரதிநிதிகள் மூலமாக தகுந்த பிரயத்தனங்கள் செய்யவேண்டும். ஊத்தங்கரை தாலூகா ஹரூரில் சில பெரிய விவசாயிகள் தங்கள் கிராமத்தொகுதிக்கென ஓர் பஞ்சாயத்து போர்டு (Panchayat Board) ஏற்படுத்தி குடிகளை நீர்ப்பாசன வசதிகள் உண்டாக்கிக் கொள்வதில் முயற்சிசெய்து தீவிரமான வேலைநடந்துவருவதைப் பற்றி நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். இத்தகைய ஏற்பாடுகள் அங்கங்கே நாம் செய்து நமது நிலங்களையும் வருமானங்களையும் சாஸ்வதமான மேம்பாடடையச்செய்யவேண்டும்.

மலைகளில் வேளாண்மையாலும் தானாகவும் பல பொருள்கள் விளைகின்றன. காட்டுச்சரக்குகளை தகுந்தபடி உபயோகித்து பெரும்பயனளிக்கும் வியாபாரப் பொருள்களாக்கலாம். முறைகள் தெரியாத நாம் வெளிதேச அனுபவங்கள் பெற்றுவந்தால் இப்போது பிறநாடுகளிலிருந்து எதிர்பார்க்கும் பலவற்றை இங்கேயே தயார்செய்துக்கொள்ளலாம்.

உலோகவகைகளிற் பல நமது ஜில்லாவில் கிடைக்கின்றன. அவைகளை நம்முன்னோர் சொற்பமாயாவது உபயோகித்து வந்திருக்கின்றனர். இப்போதோ நமக்கு இது சம்மந்தமான எந்தக் காரியமும் செய்ய முறையறியாதவர்களாய் இருக்கிறோம். பணக்கார வர்த்தகர்கள் பிரயத்தனம் செய்தால் பெருத்த தொழில்களையும் ஸ்தாபிக்கலாம். இப்போதிருக்கும் தொழிற்சாலைகள் வெளிதேசத்தாரால் நடத்தப்படுவதால் நாம் அவர்கள் சொன்ன வேலைசெய்யும் கூலிகளாக இருக்கிறோமே யொழிய அத்தொழில் செய்யும் முறைகளை கற்றுக்கொள்ள முடிவதில்லை.

நமது ஜில்லாவில் தொன்று தொட்டு மேம்பாடடைந்த கைத்தொழிலாயுள்ளது நெசவு. நெசவு சிறந்திருந்தும் உயர்ந்த விலைக்கு நெய்த வஸ்திரங்களை விற்றும் அத்தொழிலாளிகளில்

100-க்கு 75 பேர் ஏழைகளாகவே இருக்கின்றனர். ஏனெனில் அவர்கள் வெளிநாடுகளிலிருந்து வரும் நூல்களை அதிக விலைக்கு வாங்கி வஸ்திரங்களாக்குவதில் சொற்ப கூலிதான் நெய்தலுக்காக கிட்டுகிறது. பருத்தி நம்மிடமே இருந்தும் நெய்த்தக்க நூலாகச் செய்துகொடுக்க வேளிதேசத்தாரை எதிர்பார்த்தவர்களாய் இருக்கின்றனர். நமது நாட்டிலேயே நூல் நூற்கப்பட்டால் செலவு அதிகமாகாது. பருத்தியை வெளிதேசத்திற்கு அனுப்பி, திருப்பி நூலாக வரப்பெறுவதால் விலை அதிகமாகிறது. இச்சுற்று வழியை நீக்கி நம் நாட்டிலேயே நூல் நூற்கப்பட்டால் இக்குறை தீரும். இங்கேயே நூற்குந் தொழில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கொடுத்துக் காப்பாற்றும். பெரும்பான்மையோர் இவ்வபிப்ராயத்தை ஒட்டித்தான் நாம் ஒவ்வொருவரும் சுயமாக நூல் நூற்க சர்க்காக்களை சுழற்றல் வேண்டுமென்பது.

இதுபோன்ற கவனிக்கத்தகுந்த பல அம்சங்கள் இருக்கின்றன வெனினும் இவ்விவரங்களே நமது ஏழ்மைத்தனத்தை ஒருவாறு நீக்கி நமது இருப்பிடத்திலேயே நாம் செய்து லாபமடையத்தகுந்த பலவேலைகள் இருக்கிறதென்பதை தெரிவிக்கிறது. இப்படி இருக்க நமது சகோதரர்களில் அநேகர் பிழைப்பி நிமித்யம் நாட்டைத்துறந்து வெளிதேசங்களுக்கு கூலியாட்களாக வெளியேற விடுவானேன்? நாம் அவர்களை அவ்வாறு போவதைத் தடுக்க மேற்கண்ட வேலைகளை பிரயத்தனம் செய்து ஸ்தாபித்தோமானால் அவர்களை சகல சௌக்கியங்களுடன் நம்முடன் வாழச்செய்யலாமல்லவா?

:0:

# கம்பர் கவிநயம்.

உலகெலாம் போற்றும் உத்தமக்கவிஞரின் உட்கருத்துக்கள் காரணத்துடன் தொடர்புண்டு ஆயுந்தோறும் மனத்திற்குப் பெரிதுமின்பம் பயப்பனவாமென்பது ஆன்றோரின் அனுபவ சித்தமாம். இதனாலன்றோ கவிஞர் பிரானாகிய கச்சியப்பமுனி வரும் தணிகைப்புராணம் களவுபடலத்து 'ஆயுந்தொறுந்தொறு மின்பந்தருங்கலே' யெனக் கூறுவாராயினர். இதற்கெடுத்துக் காட்டாகக் கவியரசராகிய கம்பரது இராமாவதாரத்திற் பல செய்யுட்களைக் காணலாம். அவற்றுளொன்றை யீண்டெடுத்துக் கூறுவாம்.

இராமலக்குமணர் தந்தை சொற்படி வனம்புகுந்து தெய்வ நதியாகிய கங்கைக்கரையை யணுகிப்பிராட்டியாரோடு வசித்து வந்தபோழ்து அப்பிரானின் திருமேனியழகை வருணிப்பான் புக்க கம்பர் "வெய்யோனொளி தன் மேனியின் விரிசோதியின் மறையப், பொய்யோவெனுமிடையாளொடும் இளையானொடும் போனான், மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ, ஐயோ இவன் வடிவென்பதோர் அழியாவழகுடையான்" எனப் பல நயங்களும மையச் சமத்காரமாகக் கூறினர்.

ஆயிரம் சூர்யர்களுடைய ஒளியானது ஆகாசத்தில் ஒரே காலத்து உண்டாவதாயின், அது அந்தப்பெரிய பொருளின் ஒளிக்கு ஒப்பாகும் எனக் கீதையில் எம்பெருமானது திருமேனி யின் ஒளி வருணிக்கப்பட்டுளது. இக்கருத்தையே 'பல்லாயிர மிருள் சீறிய பகலோனென வொளிரும் வில்லாளன்' என்று கம்பர் ஆரணியகாண்டத்துக்கூறியுள்ளார். அதனினு மதிக மாக வருணிப்பான் புகுந்து தனது திருமேனியினிருந்தெழுந்து விரிகின்ற பேரொளியிற் கதிரவனது காந்தி மறையும்படியாக ஸ்ரீராமபிரான் விளங்கினனென்பதை முதலடியிலழகாகக் குறிப் பிட்டார். அளவுகாணப்படாத அப்பிரானது அதி சௌந்தர் யத்தை மீட்டும் புனைந்துரைப்பான் தொடங்கிக் கருநிறக் கோல

த்தை நோக்கி 'மையோ' என்றார். கருநிறத்தோடு பச்சைநி ரத்தின வர்ணமும் காணப்படுதலின், கேவலம் கருநிறமொன்றே மிக்குள்ள, மை, பவாது திருமேனிக்கு முழுதுமுவமையாகா தென்பான் அதற்குமேல் 'மரகதமோ' என்றார். பிரானது திருமேனியில் நீலவுருவும் புலனாகின்றதாகலின், பசுமை மிக்குக் கருநிறமொரு சிறிதுகொண்ட மரகதமு மதற்கீடாகாது. அதற்கு மேலுமொரு பொருளிருத்தல்வேண்டும். அளவு காணப்படாத பிரானது அழகுக்கு அப்பொருளே ஒப்புமையாயிருத்தல்வேண்டும். அதுவுங் கடலே என நினைந்து 'மறிகடலோ' என்றார். மின்னையும் பல நிறங்களுக்கிடனாகிய வான வில்லையுந் தன்னகத்தேகொண்டு உயர்விட முற்றுக் கைம்மாறு வேண்டாது பிறர்க்குதவுதல், உவர்நீர் நன்னீராகிய உலகநீரை வேற்றுமையாராட்டாது கொண்டு மீட்டும் நன்னீராயே பொழிந் துபகரித்தல் ஆதிய குணங்களினுஞ் சிறந்து பெரிதும் போற்றத்தக்க கார்மேகமொன்றே, கடலினுஞ் சிறந்துவமையாதற்குரியதாம் எனத்துணிந்து 'மழைமுகிலோ' என்றார். கோதண்டமாகிய வில்லையும் பிராட்டியாகிய மின்னையுங்கொண்டு உலகங்களுக்கெல்லாம் தலைமையுற்ற வைகுண்டத்தே அடியார்க்கருள் சுரக்க வீற்றிருந்து ஜீவர்களிடத்துக் கைம்மாறுவேண்டாது, குணகுற்றங்களையாராய்ந்து அருளாகிய குணத்தையே பொழிகின்ற எம்பெருமான் கார்மேகத்துக்கேற்ற உவமையாதல் ஈண்டு நோக்கத்தக்கதாம். ஆயினும் அப்பெருமானது ஆணையினடங்கித் தனக்கென்று இயல்பிலே வலிமை கொண்டிராத மேகம், சர்வ வல்லமைகளையும் இயல்பிலேயுடைய பெருமானது சக்தி வல்லபத்தை நோக்குங்கால் முற்றும் உவமையாகாதே, அதனினு மேலாக வருணிக்க ஓர் பொருளை நாடலாமெனின் மற்றெதுவுமில்லையே யென்றிரங்கி 'ஐயோ' என்றார். இவ்வுவமைகளும் வேறு சில நயங்களுமமையச்சிலப்பதிகாரத்து இளங்கோவடிகள் திருவேங்கடத்தெம்பெருமானது வைபவ நிலையை வருணித்திருப்பது பெரிதுமின்பம் பயக்கின்றதாகலின் அக்கவியினை யீண்டுத் தருகின்றாம் அது :—

வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமுந்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ராரமார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்

என்ற பாசுரமேயாம். எமது அரிய நண்பரும் 'அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை (1500 கவிகள்கொண்ட சிறந்த செந்தமிழ்நூல்) ஆசிரியருமாகிய அரங்கநாத கவிராஜரவர்கள் தமது நூலில் குறித்திருக்கும் அடியிற்கண்ட பாசுரமும் இங்குக் கவனிக்கற்பாலதாகலின் அதனை யீண்டு வரைகின்றும் அது:—

'கணக்கறு மிரவி கதிர்கவர்ந் திலங்கிக்
காவல்கொண் டுலக நேர் பிறமும்
பிணக்கினர்ச் செருக்குந் திகிரியுங் கரத்திற்
பிடித்திடக் குழைந்தொளிர் பரந்த
குணக்கெதிர் மதிய மெனத்திகழ் வளையுங்
குலவிய திருகரத் தவனை
இணக்கிய வனசஞ் சலதரத் தென்ன
வெழிறிகழ் நீலமேனியனை'

என்பதேயாம். இத்தகைய கவிகள் நுணுகி யாராய்தற்குரியனவாய்த்திட்ப நுட்பஞ்செறிந்து சூத்திரமென்னலாம் படியமைந்துள்ளன. இவைபோன்றவற்றை யினியும் ஆராய்ந் தெழுதுவாம்.

இங்ஙனம்,
பண்டிதர். ரா. திம்மப்ப ஐயர்,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,
முனிசிபல் காலேஜ்,
சேலம்.

# மணம்.

மணமென்ற பெயர்ச்சொல்லுக்கு வாசனையென்பது
பொருள். "மணமென்ப வாசங்கூட்டம் வதுவையுமாகுமென்ப"
என்றார் சூடாமணி நிகண்டாசிரியரும். மணம், நன்மணமென
வும் துன்மணமெனவும் இருபிரிவினையுடைத்து. நன்மணம்
நன்மக்களால் கொள்ளப்படுவது. துன்மணம் சுயாவாராலுங் கடி
யப்படுவது. நன்மணம் பலவிடத்திருந்து தோற்றினும் பெரு
ம்பான்மை மலரிடத்துப்புலனும். ஆதலின் பூவிற்கு மணமுரி
யதே. மணமுள்ள மலரையே யாவரும் விரும்புவர். மணமற்ற
மலரை எவரும் கொள்ளார். இது பல்லோர் நன்கறிந்த விடய
மேயாம். நிற்க,

மணம் என்னும் மொழி முதன் முதல் இருபாலாரும் தம்முள்
வந்து சம்பந்தங் கொள்வதற்கு வழங்கும். இதற்கு வடமொழி
வல்லோர் விவாஹமென்றும், பாணிக்கிரஹணமென்றும் இன்
னும் பலவாறு பெயரிட்டுரைப்பர். பண்டைப் பனுவல்களில்
மணமென்ற சொல்லே சிறப்பித்துக் கூறப்படுவதால் மணஞ் சிற
ப்புச்சொல்லாம். இது பிங்கலந்தை, திவாகரம், நிகண்டு முத
லிய நூல்களாலும், எண்வகை மணம், சீதாபிராட்டியார் திரும
ணம், மீனாட்சியம்மையார் திருமணம், வள்ளிநாயகியார் திரு
மணம் என்று எடுத்தாளும் வழக்காறு முணர்க. பெண் ருது
வாகுமிடத்து புட்பவதியெய்தினள், பூப்புற்றனள் என்று கூறு
வதைப் பலரறிவர். புட்பத்திற்கு இயற்கையிலேயே மணமுரி
யதுபோல புட்பவதியான மகளிர்க்கே மணமுரியதாம்.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே"

என இறையனார் பாடிய பாசுரத்தானே "மகளிர் கூந்தலி
லியற்கை மணமுண்டு" என்பது இனிதுபோதரும். அன்றியும்

பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி எனும் நால்வகைப் பெண் மக்களில் தாமரைபோன்ற வாசம் பதுமினி சாதிக்குண்டென்பர் மேலோர். ஆதலால் புட்பத்தை உலகோர் விரும்புவதுபோல் புட்பவதியானப் பெண்ணைக்காமுற விடடரு—ர் நண்ணுவர். இனி மலரைவிட மலருந்தன்மைவாய்ந்த அரும்பையே மிகுதியாகப் பெற மனமுவப்பர். அத்தன்மையைப்போன்று பேராண்மையுடையார் புட்பவதியாளப் பெண்களைவிட புட்பிக்கும் பருவத்தையுடைய கன்னிகைகளையே மணக்க நாடுவர்.

பூவின் நறுமணத்தைப்பெற ஸ்ரீமிறுசள் சாத்திருப்பதுபோல் ருதுவானப் பெண்ணின் சேர்க்கை (மணத்தை)யைப் பெற தூர்த்தர் காத்திருப்பர்.

புட்பத்தில் வண்டுகள் மொய்த்து மணத்தை யநுபவிப்பது யாவர்க்குந் தெரியாததுபோல, புட்பவதியான பெண்ணிடத்து விடர்கள் நண்ணும் நாட்டமுமுணரமுடியாது. புட்பம் வண்டு நுகராததற்கு முன்னும் நுகர்ந்ததற்குப்பின்னும் எடுக்கப்படுவதால் பூவினியல்பை யுணர்வோன், அப்புட்பம் வண்டு நுகரப்பெருதத் தூய்மைத்தென்றும், வண்டு நுகர்ந்த எச்சிற்பூவென்றும் அறிய இயலாது வண்டு நுகர்ந்ததோ அல்லது நுகராததோவென ஐயுறுவன். அவ்வாறே மங்கைப் பருவமுற்ற மகளிரை மணக்குமொருவன் காமுகர்களால் அநுபவிக்கப்பெருத பரிசுத்தமுடையாளென்று அறிவதற்கு இயலாமல் அந்நங்கை அநுபவிக்கப்பட்டவளோ அல்லது அநுபவிக்கப்படாதவளோவென சந்தேகங்கொள்வன். பொதுவாகக் கருதுமிடத்து, மலர்ந்த பூவை அறுகால் நுகராதிருந்தாலும் நுகர்ந்திருக்கவேண்டுமென்றே எண்ணுவதுபோன்று புட்வதியானப் பெண் உண்மையில் ஆடவர் சேர்க்கையின்மையாயினும் சேர்க்கையுடையவர்களாகவே எண்ணுவது உலகினரின் இயல்பேயாம். ஏனெனின் அருந்ததியினும் பன்மடங்கு கற்புத்தன்மை வாய்ந்த பாஞ்சாலியின் மனமே மாறுபாடுற்றதென மாபாரதம் முறையிடுவதினின்று (ஆடவராயினுஞ்சரி, பெண்டிராயினுஞ்சரி அழலிற்பட்ட வெண்ணெய்போல்) மனமே உருகுந்தன்மையதாம்.

மலருந்தருணம் வாய்ந்த அரும்பை மானிடனொருவன் காணின் அவ்வரும்பு வண்டு நுகர்ந்த எச்சிற்புட்பமென்று கருதாது பரிசுத்தமுடையதென மிக மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுகிறான். அன்னவனைப்போல் ருதுவாகுந் தருணவாய்ந்த தலைமகளை மணக்குந் தலைமகன் கண்டால் தூர்த்தர்களால் அநுபவிக்கப்பெறாதத் தூய்மையளென மனமுவந்து மணக்கின்றான். மலர்ந்த மலர் மத்திபமும், மலருந் தருணப்பெற்றது உத்தமமுமாம். அதுபோல் பூப்புற்றாளின் மணம் இடையாயதெனவும், பூப்புறும் பருவத்தாளின் மணம் தலையாயதெனவும் கொள்கை. இக்கருத்தையுட்கொண்டேதான் "ருது தரிசனத்திற்குமுன் கன்னிகாதானஞ்செய்யவேண்டுமென" கௌதமரும், "முப்பது வயதுடைய ஆடவனைப் பன்னிராட்டைப்பிராயத்தாள் மணந்துகொள்ளலாமென" மநுவும் சாற்றியுள்ளார்கள். ஆதலின் மகளிரின் மணப்பருவம் எட்டுவயதிலிருந்து பதின்மூனர் வயதளவுமுள்ள மூன்று வருடங்களெனத் தெள்ளிதில் விளங்குவதைக்காண்க. திருவிளையாடற் புராணம் விருத்த குமார பாலரான படலத்தில் "பருவம் நாலிரண்டாகமேற் கடிமணப்பருவம் வருவதாக" என்னுந் திருவிருத்தமே போதிய சான்றாம். "பதினாறாட்டைப் பிராயத்தானும் பன்னீராட்டைப் பிராயத்தாளும்" என்று ஆங்காங்கு நூல்களில் எடுத்தாண்டிருப்பதால் பெண்கள் பன்னிரண்டு வயதில் பூப்பினையடைவார்களென்க. சில பெண்கள் மிகுதியான பருவத்திலும், குறைந்த வயதிலும் பூப்பெய்தல் அந்நாட்டின் சீதோஷ்ண நிலைமையினையும் உடற்கூற்றையும் பொறுத்து நிகழ்வனவாம். ஆனால் பண்டை மன்னர்களிற் பெரும்பாலோர் சுயவரத்தை நாட்டி பூப்புற்ற பிறகே மன்றல்செய்தனரெனின், அம்மன்னர்கள் தமது பெண்களை வேற்றரசர் பார்க்கப்பெறாது தனிப்பாதுகாப்புச் செய்ததோடும், அவ்வாறு செய்வது ஆடவர் காற்று (திருஷ்டி) உட்புகாதெனக் கொண்ட மனத்துணிபேயாமென்க. ஆயினும் அது இடைமணமேயாம். இனி அடுத்த சஞ்சிகையில் எண்வகை மணத்தைப்பற்றி விரிவாய் எழுதுவாம்.

காஞ்சி–வாசுதேவ ஐயர்,
தமிழ்ப்பண்டிதர்,
போர்டு உயர்தரப் பாடசாலை,
கிருஷ்ணகிரி.

# *Infant feeding.*

# குழந்தைகளுக்கு ஆகாரங்கொடுத்தல்.

**By Dr. Challan S.R.A., F.I.A.Sc., Assistant Surgeon Dharmapuri.**

குழந்தைகளைப் போஷிக்கும் முறை அறியாமை :—

ஐரோப்பாவில் அநேக சிறந்த வைத்தியர்கள் சிசுபோஷகர்கள் தேர்ச்சிபெற்ற தாதிகள் தேவையான சமயத்தில் உதவி செய்ய இருக்கும் சிறு பிராயமுள்ள தாய்மார்கள் சிசு சம்ரக்ஷணை சம்மந்தமான சாதாரண விஷயங்களையும் உணவுகொடுக்கும் முறைகளையும் அறியாதவர்களாய் இருக்கிறார்கள். நமது தேசத்திலிருக்கும் வெளிதேசத்தாயார்கள் குழந்தைகளைப் பெற்று 'ஆயாக்கள்' என்ற ஒன்றுந்தெரியாத வேலையாட்கள் வசமே வளர்க்க ஒப்புவித்து விடுகிறார்கள்.

ஒரு குழந்தை தூங்கும்போது சிரித்தாலாவது அழுதாலாவது மூடபக்தியுள்ள இந்தியஸ்திரீ தனது குழந்தை ஏதோ தெய்வத்துடன் விளையாடுகிறதோ அல்லது பேயால் பயமுறுத்தப்படுகிறதோ என சம்சயமுறுகிறாளே தவிர குழந்தை ஆகாரம் அதிகமாக உட்கொண்டதாலோ அல்லது சரிவர ஜீர்ணமாகாததாலோ உண்டான கோளாறு என்பதை அறிந்துகொள்வதில்லை. குழந்தை சம்மந்தமான எவ்விஷயத்திலும் புத்திசாலியான தாய் அவ்வளவு நம்பிக்கைக்குத் தகுந்தவளாயிருந்தாலும் அக்கம் பக்கத்திலுள்ளவர் சொல்படி கேட்கமாட்டாள். தன் குழந்தையின் சௌக்யத்தைக்குறித்த பொறுப்பை தானே வகித்திருப்பவளாதலால் அக்குழந்தை தேகஸ்திதியைப்பற்றிய சகல சங்கதிகளையுமறிய தாய்க்கு அவஸ்யமாகிறது. ஆகையால் சிசு சம்ரக்ஷணை சம்மந்த சகல விஷயங்களனைத்தும் ஒவ்வொரு ஸ்திரீயும் குறைவற அறியவேண்டியது. அதை அறிந்து நடப்பவர்கள் திடகாத்திரராயும், சுக சரீரிகளாகவும் சுறுசுறுப்புள்ளவர்களாகவுமுள்ள குழந்தைகளை வளர்ப்பிப்பர். வியாதியால்

இளைத்த குழந்தைகளையும் சௌக்கியப்படுத்தி திட சரீரிகளாக்க வும் கூடும். ஆனால் வளர்க்கும் முறையறியாதபோவதால், குழ ந்தைகளுக்கு விபாதியையும் கஷ்டத்தையும் கொடுத்து, அதிக பணச்செலவிடவும் நேர்ந்து குழந்தையையே இழக்கவும் இட மாகிறது. தாயார்கள் இவ்விஷயங்களைப்பற்றி அறிந்து கொள் ளாது பழய வழக்கங்களை அநுசரித்து பலவித கஷ்டங்களை யடைகின்றனர்.

2. ஓர் சௌக்கியமாயிருக்கும் குழந்தை சரியான காலத் தில் பிறந்தால் 7-பவுண்டு நிறையுள்ளதாய் 18-அங்குல நீளமா யிருக்கும். பிறந்த முதல் மூன்று நான்கு நாட்கள்வரை சுமார் 4 அல்லது 6 அவுன்ஸ் எடை குறைந்துவரும். பின்பு அது ஆகாரம் உட்கொள்வதால் எடை அதிகமாகி எலும்புகள், நரம்பு முதலியன உறுதிப்பட்டு சதையுடன் தினே தினே நிதானமாக வளர்ந்து ஒருவருஷத்திற்குள் சாதாரணமாக 18 முதல் 22-பவுன் எடையுடையதாகும். சாதாரணமாகக் குழந்தைகள் ஆறுமாத த்தில் இருமடங்கும் வருஷத்தில் மூன்று பங்கும் எடையில் உயரும். இம்மாதிரி வளர்ச்சி வேறு எந்த வர்க்க ஜீவராசிகளுக் கும் கிடையாது. ஆகையால் எந்த சமயத்தில் எவ்வுணவை எவ் வாறு உட்கொள்ளச்செய்யவேண்டுமென்பதை வளரும் குழ ந்தைகளிலிருந்து அறிய முடிகிறது. ஒவ்வொரு குழந்தையும் முதல் வருஷத்தில் மாதத்திற்கு ஒரு பவுண்டு வீதமும் இரண் டாம் வருஷம் மதா மாதம் 12-அவுன்ஸும் எடையில் அதிகமாகா விடில் ஆகாரம் சரியாய்க் கொடுப்பதில்லை என நிச்சயிக்கலாம். இளங்குழந்தையாயிருக்கும்போது மெதுவாகவும் வளையுமியல் பாயுமுள்ள எலும்புகள் நாளடைவில் கெட்டியாகிறது. மூளை, தசைகள், ஸ்வாசாசயம் முதலிய இதர அவயவங்களும் சீக்கிரத் தில் பெரிதாகி அவ்வளர்ச்சிக்குப்போதுமான உரம்தேடுகிறது. சிறு குழந்தையின் மனமும் தேகமும் அலைச்சலடையாது ஆகா ரம் உட்கொள்வதிலும் தூக்கத்திலும் தன் காலத்தைப் போக்கு கிறது.

3. (i) சௌக்யமாயிருக்கும் தாயின்பால்தான் குழந்தை க்கு ஏற்ற ஆகாரம். அதில் ஜலமும் (Proteids) "ப்ரோடீட்ஸ்"

என்னும் ஊனுண்டாக்கும் வஸ்து; (2) (Fat) கொழுப்பு; (3) ஒருவித சர்க்கரை; (4) உப்புகள் ஆகிய இவைகள் இருக்கின்றன. "ப்ரோடீட்" வஸ்துதான் ஜீவாதாரமான முக்ய உணவு. உணவில் இப்பதார்த்தக் குறைவால் ரத்த வ்ருத்தியும் தேக உருப்பு வளர்ச்சியும் குன்றும். இப்பதார்த்தம் நிறைந்த ஆகாரத்தையே குழந்தைகளுக்குக் கொடுத்தலவசியம். இத்தகைய உணவு கொடாவிடில் குழந்தை வெளுத்து தளர்ந்து வியாதிவராது காத்துக் கொள்ளமுடியாது பலங்குன்றியதாகிறது.

(ii) பாலிலிருக்கும் (Fat) கொழுப்பு மூளை, நரம்பு முதலியன வளர்வதற்கான சில பதார்த்தங்களை இரத்தத்திற்கு கொடுத்து உடம்பை சூட்டுடனிருக்கச்செய்ய காரணமாகிறது.

(iii) பாலிலிருக்கும் சர்க்கரை (Lactose) ரத்தத்திற்கு சூடுகொடுக்கவும் கொழுப்புண்டாக்கவும் உதவுகிறது.

(iv) பாலிலுள்ள உப்புகள் அதிலிருக்கும் 'ப்ரோடீட்' கொழுப்பு சர்க்கரைகளை உட்கொண்டு, ஜலமெல்லாம் ஆவியாய்ப்போனபின் சாம்பல் போலத் தங்கிவிடுகிறது. பாலிலுள்ள ஜலம்தான் பால் சத்துக்களை ரத்த ஓட்டத்தில் ஜீர்ணமானபின்பு சேர்க்கின்றது.

4. இயற்கையில் தாய்ப்பால் மேல்கண்ட குணங்களுள்ளதாயிருப்பதால் குழந்தைகளுக்கு கூடியமட்டில் இதர பால், செயற்கை உணவு முதலியன கொடுக்காமலிருக்கவேண்டும். குழந்தைக்கென இயற்கையிலேற்பட்ட முலைப்பால் போதாது போனால் ஏறக்குறைய குணத்தில் அதை யொத்த வேறு எந்த பாலையாவது கொடுக்கலாம். அப்போது கறந்த கழுதை, வெள்ளாடு, பசு, எருமைப்பாலில் முறையே சற்று மாற்றிக்கொடுத்தால் தாய்ப்பாலுக்கு பதிலாக உபயோகமாகும்.

5. குழந்தைக்கு ஆகாரங்கொடுக்கும் முறைகள் :—

(1) பெற்றதாயாவது, பால்கொடுக்க அமைக்கப்பட்ட தாதி அல்லது செவிலித்தாயாவது முலைகொடுத்தல். தாய் தானே

முலைகொடுப்பது உத்தமம். இதர ஸ்திரீயை அவஸ்யம் நேர்ந்தபோது கொடுக்கச்செய்யலாம். இது நமது நாட்டில் பலவித ஆக்ஷேபங்களுக்கிடமானது.

2. கழுதை, வெள்ளாடு, பசு முதலியவற்றின் பாலை சற்று மாற்றிக்கொடுப்பது.

3. முலைப்பாலும், இதர செயற்கை உணவுகளும் குழந்தைக்கு ஏற்றபடி கலந்துகொடுப்பது.

முலைப்பால் கொடுப்பதின் அவசியம் :—மேற்கண்ட மூன்று முறைகளில் எது உசிதமானதென்பதை நிர்ணயம்செய்வதில் பல விஷயங்களைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு தாயும் குழந்தைக்கு முலை கொடுத்துப் பழக்கவேண்டும். தாய் குழந்தைக்குப் போதுமான பாலிருக்கிறதா என்கிற சமுசயம் கொள்ளாமல் இயன்ற அளவும் வஞ்சனையின்றிக் கொடுக்கவேண்டும். பால் குறைவாயிருந்தாலும் சில வாரங்களுக்காவது தினம் இருமுறை முலைகொடுத்து பின்புதான் கலப்புப்பால் அல்லது செயற்கை உணவு கொடுக்க ஆரம்பிக்கவேண்டும்.

பால் குடிக்கும் குழந்தையையுடைய தாயார் சுகமான சாப்பாடு சாப்பிடல்வேண்டும். நிறைய பால் கலந்த கஞ்சி கூழ் முதலியன உட்கொள்ளவேண்டும். 'பால் சர்க்கரையை' இளங்குழந்தையுடைய தாய்மார்கள் மிகவும் விரும்புவார்கள். அதனால் பால் அதிகமாக ஊறுவதுடன் சிறந்ததாகவும் ஆகும். தாய்மார் தம் பலவித உணவையும் சாப்பிடவேண்டும். எளிதில் ஜீர்ணிக்கக்கூடிய நன்றாக சமைக்கப்பட்ட காய்கறி வகைகள் பழங்கள் முதலியன சேர்த்துக்கொண்டு அதிக மாமிசம் பச்சைக் காய்கள் முதலியன உட்கொள்ளக்கூடாது. சூடான காய்கறிகளையும் உயர்ந்த பல இதர உணவு பதார்த்தங்களையும் சமைக்கப்படாத காய்கள் முதலியன நன்றாக மென்று தின்கவேண்டும்

உயர்ந்த காபி, தேயிலை கஷாயங்களையும், மது சம்மந்த லாகிரி வஸ்துக்களையும் நீக்கிவிடவேண்டும். அடிக்கடி தாகமாயிருப்பது பால்குடிக்கும் குழந்தைகளுடைய தாயார்களுக்கு சகஜம்.

ஆகையால் லேசான காபி, டீகஷாயம் நாளைக்கு ஒருதரம் சாப்பிடலாம். அல்லது பார்லி கஞ்சி, ஷர்பத் தேங்காய்ப்பால் கோகோகஷாயம் அல்லது பால் உட்கொள்ளுதல் மேலானது. இவைகளால் தேகத்துக்கு நன்மை உண்டாவதுந்தவிர பால் அதிகம் சுரக்கச்செய்யும்.

6. தருந்தபடி குறித்தகாலத்தில் பால் கொடுப்பதின் அவசியம்:—பால் ஊட்டுவிப்பதில் ஒரு காலக்கிரமம் பழக்கஞ்செய்து கொள்ளல் நலம். சிறு தாயார்களுக்கு ஏற்படக்கூடிய தேக பாதையை நிவர்த்தித்துக்கொள்ள முதலிலிருந்தே குழந்தையை குறித்த நேரங்களில் பாலுட்கொள்ளச்செய்தலானது உதவுகிறது. அநேகர் நான் "குழந்தைப்பருவம்" என்ற தலைப்பில் எழுதிய வியாசத்தில் குறித்தவாறு கஷ்டப்படுவதால் நிவர்த்திக்கக்கூடிய சில முறைகளை இதில் எழுதுகிறேன்.

7. செயற்கை உணவுகளைக் கையாடுவதில் கவனிக்கவேண்டிய விவரங்கள் :—

குழந்தைக்கு அஜீர்ணம், வயிற்றுப்போக்கு முதலியன உடனேயாவதும் நாளடைவிலாவதும், ஜீர்ணக்குறைவு, வலுப்பு, மாந்தம் முதலியன ஏற்பட இடங்கொடாத நல்ல சரக்கு உணவாயிருக்கவேண்டும். இப்போது எத்தகைய குழந்தைக்கு எவ்வுணவு எம்மாதிரி அளிப்பது என்பது சிறந்த வைத்திய சாஸ்திர ஆராய்ச்சியால் வரையறுக்கப்பட்டிருக்கிறது. உணவு எப்பதார்த்தங்களால் செய்யப்பட்டதென்பதைவிட அவ்வுணவால் தேகத்திற்கு உண்டான நன்மை தீமை ஆகிய பலன் என்ன என்பதைக்கொண்டே அவ்வுணவுப்பொருளின் யோக்யதையை அறியவேண்டும்

குழந்தையின் ஜீர்ணக்கருவிகளும் இதர அங்கங்களும் நுட்பமானதாயிருப்பதால் ஒரு அல்பகாரணத்தாலும் விபரீத தொந்தரவுகளும் நேரும். ஆகையால் உணவு விஷயத்தில் உத்தம தன்மைகளையுடையவற்றினையே உபயோகித்தல் வேண்டும்.

அடியிற்கண்ட அம்சங்களுள்ள உணவைத் திருப்திகர மானதாகக் கருதலாம். (1) செயற்கை உணவானது குழந்தையின் சகல அங்கங்கள், உருப்புகள் ஏற்றத்தாழ்வின்றி வளரத்தகுந்த போஷணைப்பொருள்கள் உடைத்தாயிருக்கவேண்டும்.

(2) சுகமாக ஜீர்ணித்துக்கொள்ளக்கூடிய பதார்த்தங்களையே உடையதாயிருக்கவேண்டும்.

சாதாரணமாகப் பால்கள் எல்லாம் ஒன்றைப்போலவே சாராம்சங்களில் ஏறக்குறைய உள்ளதாகச்சொல்லலாம். அந்தத் தப் பாலில் உள்ள சாராம்ச பதார்த்தங்களை யனுசரித்துப்பார்த்து ஒத்திட்டால் அடியிற்கண்டவாறு இருக்கிறது.

| | | |
|---|---|---|
| 1. தாய்ப்பால் | 3. வெள்ளாட்டின்பால் | 5. எருமைப்பால் |
| 2. கழுதைப்பால் | 4. பசுவின்பால் | 6. இதர செயற்கை உணவுகள். |

ஜலங்கலந்த பசு அல்லது எருமைப்பால் தாய்ப்பாலை ஒத்த தாயிருக்கிறது என்றாலும் இதில் ஏதாவது ஒன்றைமட்டும் உப யோகித்தல் ஆக்ஷேபகரமானது. பசுவின்பாலைவிட கழுதை, வெள்ளாட்டின்பால் தாய்ப்பாலை அதன் தன்மையில் ஒத்திருக்கிறது. கழுதைப்பால் தேவையானபோது உடனேகிடைப்பது கஷ்டமாயிருப்பதாலும் வெள்ளாட்டின்பால் ஓர் வாடை அடிப்பதாலும் அதிகமாக குழந்தைகளுக்கு உபயோகிப்பதில்லை. வெள்ளாடு சுத்தமாயில்லாமலும் சரிவர ஜாக்ரதையாக ஆகாரங்கொள்ளாதிருப்பதாலும் பால் ஒரேமாதிரியாயில்லாமல் பலவித மாறுதல் அடைவதால் நம்பிக்கையாய் சாப்பிடக்கூடியதாயில்லை. அக்கரையுடன் ஓர் கழுதை அல்லது வெள்ளாட்டை சரிவர ஆகாரங்கொடுத்து சுத்தமாய் வைத்திருந்தால் அதன் பாலை குழந்தைகளுக்கு கொடுக்கலாம். சிலவும் சொற்பமேதான்.

பசுவின்பாலை குழந்தைகள் ஜீர்ணம் செய்துகொள்ளத் தகுந்ததாகச் செய்வதில் கீழ்குறித்த சங்கதிகளை கவனிக்கவேண்டும் :—

1. வெண்ணெய் குறைவாகவும் எளிதில் ஜீர்ணிக்கத் தகுந்ததாகவுமிருக்கவேண்டும்.
2. Carbo hydrates அதிகமாகவிருக்கவேண்டும்.
3. பால் க்ஷாரஸ்வபாவமானதாயிருக்கவேண்டும்.
4. Vitamines and antiscorbatives must be retained unimpaired

குழந்தைக்கு ஆகாரமாக உபயோகிக்கப்படும் பால் நல்ல சௌக்யமாயிருக்கும் மிருகத்தினின்றும் கறக்கப்பட்டதா என்பதை மிகவும் ஜாக்ரதையாக கவனிக்கவேண்டியது. உபயோகப்படுத்தும்வரை பாலை வெகு ஜாக்ரதையாக வைத்திருக்கவேண்டும். பாலை அதிகநேரம் பொங்கவிடுவதால் அதிலிருக்கும் antiscorbative சத்துகள் போய்விடுகிறது.

பொங்கும் சமயம்வரை பாலை காயவைத்தால் போதுமானது. பாலை குளிர்ந்த இடத்தில் மூடி ஈ முதலியன வராவொட்டாது பத்திரமாய் வைக்கவேண்டும். ஈக்கள் எரு, பட்டுப்போன பதார்த்தங்கள் முதலிய அசங்கியமான இடங்களிலிருந்து வந்த பாலை அடைவதால் அத்துடன் வரக்கூடிய பல கொடிய கிருமிகள் சேர்ந்து அதிகமாக வயிற்றுப்போக்கு முதலிய பல வியாதிகளுக்கு இடமாகும்.

10 (Feeding Bottles) பால்புட்டிகளை சுத்தமாக வைப்பதன் அவசியம்:—குழந்தைகளுக்கு பால் ஊட்டும் கருவிகளை வெகு சுத்தமாக வைத்திருக்கவேண்டும். பால் புகட்டும் புட்டிகள் இரண்டு வைத்திருந்து ஒன்றை உபயோகித்த உடனே ஓடும் ஜலத்தில் கழுவி குளிர்ந்த ஜலத்தில் போட்டுவைத்திருக்கவேண்டும். பின் மற்றொன்றை உபயோகிக்கவேண்டும். இப்படி மாற்றி உபயோகித்தல் உத்தமம். Taet ரப்பர் முலைகாம்புக்கு உள்ளும் புறமும் சுத்தப்படுத்தவேண்டும்.

செயற்கை உணவுப்பொருள்களை பிறந்ததுமுதல் உபயோகித்துவருவதில் குழந்தை உடம்புக்கு ஒத்துகொள்ளாவிடில் ஏதாவது தொந்திரவு உண்டாகிறது. சிலசமயத்தில் மலச்சிக்

சலும், சிலசமயம் மலச்சிக்கலும்உண்டாகும். பாலுடன் Sodium citrate ஐச்சேர்த்தால் அதிலுள்ள வெண்ணெய் பதார்த்தம் குழந்தை எளிதில் ஜீர்ணம்செய்துகொள்ளத் தகுந்ததாகும். அப்படிசெய்தால் பாலை ஜலங்கலவாமலும் உபயோகிக்கலாம் அதனால் அதிக கழிச்சலில்லாமல் காத்துக்கொள்ளலாம். கீழ்கண்டவாறு தயார்செய்துகொடுத்தால் 15-நாள் குழந்தை முதற்கொண்டு சௌக்யமாய் பால் சாப்பிடலாம். 6 மாதமானபிறகு கொஞ்சங் கொஞ்சமாய் Sodiumcitrate ஐக்குறைத்து பின்பு அப்படியே பாலை சாப்பிடச்செய்யலாம்.

citrated பால் தயார்செய்யும் முறை :—கொதிக்கும் ஜலத்தில் ஒரு தேக்கரண்டி 6 கிரையின் Sodium citrateஜப் போடவும். பின்பு பாலில்கலந்து ஒவ்வொரு முறையும் ஆற்றிக்கொடுக்கவும்.

மலக்கழிச்சலைக்குறைக்க சுண்ணாம்பு ரசத்தின் (Lime water) உபயோகம் :—மலக்கழிவிருந்தால் பாலில் மேல்கண்டவாறு ஒரு தேயிலைக்கரண்டிக்கு பாதி தெளிவாய் இருந்த சுண்ணாம்பு ஜலத்தை சேர்க்கலாம்.

(Barley) மலச்சிக்கலுக்கு பார்லி ஜலம்:—சரியாக வெளிக்குப் போகாமல் மலம் சிக்கலாயிருந்தால் ஆகாரங்கொடுப்பதில் பாலைக் குறைக்கவேண்டும். சாதாரண ஜலத்தைவிட பார்லி (Barley) ஜலத்தில் பாலையாவது இதர உணவையாவது (Patent food like Mellins food) கலந்து கீழ்குறித்தவாறு கொடுக்கலாம். ஒரு பைண்ட் பார்லி ஜலம்செய்ய மூன்று தேக்கரண்டி முத்துபார்லி அரிசியை எடுத்து குளிர்ந்த ஜலத்தால் கழுவி பின் வெந்நீரால் கழுவி ஜலத்தைக் கொட்டிவிட்டு $1\frac{1}{2}$ பைண்ட் நல்ல ஜலம்விட்டு ஒரு பைண்ட் ஆகும்வரை இடையில் கிளறிக்கொண்டே கொதிக்கவைக்கவேண்டும். கொதித்தபிறகு கீழே இரக்கவும். ஒரு நாளைக்காகவேண்டியதை ஒரேதரம் செய்துகொள்ளக் கூடாது. ஏனென்றால் சீக்கிரம் ஆறினபின்பு அது புளித்து உபயோகமற்றுப்போகும்.

சில சமயம் நன்ருகப் பழுத்த ஆரஞ்சுப்பழ ரசம் ஒருநாளைக்கு இரண்டொருதரம் கொடுத்தால் மலச்சிக்கல்பாதை நிவர்த்தியாகும்.

13. ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டும்;—எல்லோருக்கும் சட்டம் ஒன்றே என்பது போலல்லாமல் குழந்தைகளின் தேகஸ்திதி ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு மாதிரியாயிருப்பதால் பலவித உணவுகளைக்கொடுப்பதில் வெகு ஜாக்ரதையாயிருக்க வேண்டும். ஆகையால் முதல் இரண்டு வருஷத்திற்குள் சாவதானமாய் வளரும் குழந்தை சாதாரணமாய் சாப்பிடக்கூடிய பதார்த்தங்களை ஏற்றுக்கொள்ளப் பழகிக்கொள்கிறதால் எச்சரிக்கையாகவே இருத்தலவசியம். ஆகாரத்தப்பிதத்தால் ஜீர்ணக் கருவிகள் கெட்டுப்போவதன்றியில் குழந்தையின் பலத்தை போக்கடித்துவிடும். ஆகாரம் தவருனல் குழந்தையின் மல வித்தியாசத்தால் அறிந்துகொள்ளலாம். மலம் பசுமையாயும், கழிச்சலாயும் நாற்றமாயுமிருந்தால் ஆகாரமுறையை மாற்ற வேண்டுவது அவசியம்.

14. தாய்மார்கள் அறியவேண்டியவை :—Dietic Donts ஆகாரங்கொடுத்தலில் வேண்டாதவைகள்.

1. அழாதிருப்பதற்காகவாவது, விளையாட்டிற்காகவாவது ஏதாவதொன்றை சப்பவிடவேண்டாம்.
2. காலியான பால் புட்டிவாயைச் சப்பவிடவேண்டாம்.
3. பால் புட்டியில் நீளமான ரப்பர் குழாயை உபயோகிக்கவேண்டாம்.
4. பசியால் அழுகிறதா என்பதை அறிந்துகொள்ளாமல் குழந்தை அழுத உடனே பால் புட்டியையாவது, முலையையாவது கொடுக்கவேண்டாம்.
5. சாப்பிடுவதில் ஒரு திட்டமான பழக்கம் குழந்தைகளில் உண்டாக்கவேண்டும். குழந்தைக்கு நினைத்தபோதெல்லாம் ஆகாரங்கொடுக்கவேண்டாம்.

6. ஆகாரத்தை குழந்தைகள் நிதானமாய் உட்கொள்ளப் பழக்கவேண்டும். அவசரமாகவும் ஆத்திரமாகவும் ஆகாரங்கொடுக்கவேண்டாம்.

7. சோளமாவு, ஜவ்வரிசி, ரொட்டி, பிஸ்கோத்து முதலியன கொடுக்கவேண்டாம். பல் முளைக்கும்வரை குழந்தைக்கு (Starchy) கஞ்சி பதார்த்தம் கொடுக்கவேண்டாம்.

8. வெண்ணெய் நீக்கப்பட்ட பாலையாவது (Skimmed milk) அப்போது கறக்கப்பட்ட பாலல்லாது வேறுவது உபயோகிக்கவேண்டாம்.

9. தகுந்த வைத்யர்கள் கொடுத்தாலன்றி குழந்தைகளுக்கு காய்ச்சல் சூர்ணம், தூங்க மருந்து முதலியன கொடுக்கவேண்டாம்.

10. பெரியவர்களுக்கென தயார்செய்யப்பட்ட ஆகாரவகைகளில் கொஞ்சமேனும் குழந்தைக்குக் கொடுக்கவேண்டாம்.

11. லாகிரி சம்பந்தமான எந்த வஸ்துவையாவதும், தேயிலை, காப்பி கஷாயமுதலியனவும் கொடுக்கவேண்டாம்.

12. வைத்தியராகச் சொன்னாலல்லாது குழந்தைக்கு எந்த பழமும் சாப்பிடக் கொடுக்கவேண்டாம்.

---

N. B. குறிப்பு:—இது சம்பந்தமான விசேஷ விஷயங்கள் தேவையானால் எழுதியவரிடமிருந்து தெரிந்துகொள்ளலாம். அடுத்தபகுதியில் பால பருவத்தைப்பற்றிய விவரங்கள் வெளி வரும்.

Antiscorbative Substances=சத்தான உணவுப்பொருள்கள். Alkaline=மர உப்பு, காரம். Lactose=பாலில் இருக்கும் ஒருவிதமான சர்க்கரை. Proteids=ஊனுண்டாக்கும் வஸ்து. Carbo hydrates=சர்க்கரை, கஞ்சிப்பசை, பிராணவாயு ஜலவாயு அணுக்கள் கலந்த உணவுப்பதார்த்தங்கள். Vitamines=உணவுப்பதார்த்தங்களில் வியாதி வராது தடுத்து பலத்தை கொடுக்கக்கூடிய வஸ்து. Strach=கஞ்சிப்பசை.

# சில புண்யக்ஷேத்ரங்கள்.

Special to Dharmabodhini.

[By K. R. R. Sastry M. A. F. R. Econ. S. (London)]

ஒரு பக்தனின் அபிப்பிராயம் I.

நம் தமிழ்நாட்டிலுள்ள் நடையுடைபாவனைகளை விவரிப்பது சுலபமான காரியமல்ல. அதிலும் ஆந்திரதேசத்தினரென்ன, ஒரியா மாகாணத்தினரென்ன, வங்காளி பாபுவென்ன இவர்களின் ஒழுக்கத்தையும், தேச ஆசாரங்களையும் அறிவதென்றால் அரிய விஷயமே. பாஷை மாறுபாடுகளென்ன, தேசத்தின் அமைப்பென்ன, இவைகளில் ஒவ்வொன்றும் நம்போன்றவர்களுக்கு முக்கியமானவையே. உலகத்தைச்சுற்றும் தேசயாத்திரிகர், பாதிரிமார்கள் முதலியோர் நம் ஜனங்களை நன்றாய் உணரமுடியாது. ஒரே ஒருவழிதானுண்டு. ஹிந்து மதம் ஒன்றுதான் நம் தன்மையைப்பற்றி யுணர்த்துவதற்கோர் சிறந்த சாதனமாம். இக்காரணம்பற்றியே மஹா நிபுணர்களாகிய, மோக்ஷ மூல பட்டாசாரியாரும் (Max Muller) ஸர்ஜன்வுட்ராபும் நம் சாஸ்திர பாண்டியத்தினாலேயே, நம்மனதைக் கவர்ந்தனர்.

போக்குவரவு ஸாதனங்களில் மிகவும் பிற்போக்கான இந்தியாவிற்கூட 2475-மைல் பிரயாணம் செய்வதென்றால் அரிதல்ல; ஆனால் மலையாளி, தமிழர்கள், ஆந்திரதேசத்தினர், வங்காளிபாபு, மார்வாரீ முதலியோரது குணாதிசயங்களைச் சரிவரத் தெரிந்துகொள்வது வெகு எளிதானகாரியமல்ல.

மலையாளியின் குணாதிசயங்கள். மாசு மறுவற்ற ஒற்றை வேஷ்டியும், கௌபீனமும், மலையாளியிடந்தான் காணமுடியும். தனது "இல்லத்தில்" ரெயில்வண்டிகூட ஏராத நம்பூரிப்ராமணர்கள் ஒருபுரமிருக்க நாயர் வகுப்பினர் மிகவும் அபிவிருத்தியடைந்துவருகிறார்கள். நமது சக்ரவர்த்தியது இந்தியா கவுன்ஸிலிலுஞ்சரி பேர்பெற்ற ஹோடல்களாயினுஞ்சரி, ரூபலாவண்யத்திலும், சுத்த உடையிலும் நாயர் வகுப்பினர் பேர்பெற்றவர்

களே. வீட்டுக்கருகில் ஓடும் காவாயிலாயினுஞ்சரி, 7000-மைலுக்கப்பாலுள்ள பிரதேசமாயினுமென்ன, நாயர் வகுப்பினர் யாதொரு மயக்கமும் கொள்வதில்லை. ராணுவ வீரர்களென்ற மூதாதைகளின் கௌரவத்தை இன்றைக்கும் நிலை நிருத்திவருகின்றனர்.

கன்னியாகுமரியின் தோற்றம் பாரதமாதாவின் பாதாரவிந்தத்தில் நின்று இந்தியாவின் பண்டைக்கால மேன்மையை மனமார வாழ்த்துவதென்றால் இந்தியமக்கட்களுக்குத்தான் முடியும். சூரியோதயத்திலும், அகாதமான ஆழியில் வெய்யோன் மறைவதும் இவ்விடத்தில் வெகுலாவண்யமான காக்ஷிகள். அரிசி, பருப்பு, கடுகு முதலிய பதார்த்தங்களெல்லாம் மணல் ரூபமாய் காணப்படுகின்றன. மகா யுத்தத்தின் முன்பாக இவ்விடத்திலுள்ள பொடிமணல்களை சாக்கு சாக்காக ஜெர்மானியர் தம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்தனர். அருகிலுள்ள பாறையிலுள்ள விபீஷணர் பாதம் ஒரு திவ்யக்ஷேத்ரமாகும். கன்னியாகுமரி முதல் ஹிமயமலையிலுள்ள கைலாஸகிரிவரையில் நம் நாட்டில் எங்குபார்த்தாலும் தைவீகஸ்தலமே.

ஸுசீந்த்ரம் கோயில். ஏழுமைலுக்கப்பால் வெகு விசேஷமான ஸுசீந்த்ரம் கோயிலுள்ளது. இவ்விடத்திலுள்ள அற்புதமான கல்வேலைகள் பார்ப்போர் மனதைக் கவரச்செய்கின்றன ஒரு ஐதிகம் யாதெனின் மூலவிக்ரஹத்தில் ஒவ்வொரு இரவும் அர்த்தஜாம பூஜைக்குப்பிறகு அலங்காரத்தில் மாறுபாடடைவது வழக்கமாம். இதற்கு காரணம், தேவேந்திரன் தன் மஹா சாப விமோசனத்திற்காக இங்கு ஒவ்வொரு இரவும் பூஜைசெய்து வருவதாக ஜனங்கள் நம்பிக்கை. இம்மணி ஓசையைக்கேட்க வெகு ஆவலுடன் கோயிலுக்குட் காத்திருந்த ஒரு மனிதனது கண்கள் குருடாய்ப்போயின என்று சொல்வோருமுண்டு.

நாங்குநேரி ஜீயர்ஸ்வாமிகள். வானுமலை மடாதிபதியின் ஸ்தானமாகிய நாங்கு நேரிக்கேகியதும் தீர்த்தத்திற்காக பக்த கோடிகள் அநியாயமாய்ப் பிரீவி கௌன்சில் வரையில் வாது

செய்தது ஞாபகத்திற்கு வருகிறது. இதுவிஷயமாய் என் மாமன் ஒருவர் வெகுதனம் குவித்தபோதிலும் தீர ஆலோசிக்கையில், முதல் தீர்த்தத்திற்காக இவ்வளவுதனம் அநியாயமாய் செலவழிக்கப்பட்டு, இதற்காக 7600-மைலுக்கப்பாலுள்ள நியாய கோர்ட்டுவரையில் பேசவேண்டுமா என்று தோன்றுகிறது.

பாண்டியநாடு. தர்மபூமியாகிய மலையாளத்தை விட்டவுடன் பாதைகளின் சீர்கேடும், சத்திரங்களின் தொகை வரவரக் குறைவதுமே விசேஷ அறிகுறிகள், பாளையக்காரர் கோட்டையின் மதில்கள், பாஞ்சாலங்குரிச்சி மரவர்களின் வீர பராக்ரமம், ஆதிச்ச நல்லூரிலுள்ள மணல்திட்டுகள் இவை புராதன மேன்மையை விளக்கிக் காட்டுகின்றன.

நெல்லையப்பர் கோயில். திராவிடகோயில்களின் முக்கிய அம்சங்களெல்லாம் திருநெல்வேலியிலுள்ள நெல்லையப்பர் கோயிலிற் காணப்படுகின்றன. கோபுரம் விமானம், நூற்றுக்கால் மண்டபம், நந்தி த்வஜஸ்தம்பம், பலிபீடம், கல்யாணமண்டபம், நடேசர், காந்திமதியம்மன், நெல்லையப்பர், ஸுப்ரமண்யர், விக்னேஸ்வரர்—இவர்களது கோயில்கள் கோயிலைச் சுற்றியுள்ள மதில் இவையெல்லாம் சிவஸ்தலங்களுக்கு பொதுவான சில அம்சங்கள். இக்கோயில்களின் வடக்கு எல்லையை குறிப்பிடவேண்டுமானால் வடஇந்தியாவில் ப்ருந்தாவனத்திலுள்ள ஸ்ரீ ரங்கநாதஸ்வாமி கோயிலைத்தான் குறிப்பிடவேண்டும்.

தமிழ்நாட்டு ஜனங்கள். மலையாளதேசத்திற்கு வெகு ஸமீபத்திலிருந்தாலும் சுத்த தமிழரைக் காணவேணுமாயின் திருநெல்வேலியிற்றான் முடியும். யாழ்ப்பாணத்திற்கு ஸமீபமாயிருந்தாலும் தஞ்சாவூர், திருச்சி இவ்விடங்களைவிட இங்கு நல்ல தமிழ்தான் பேசுகிறார்கள். சற்று செவலை நிறமாயும் ஸாதாரணமாய் நன்றாய் வளர்ந்தவரும் பேசும்பொழுது "ய" "ஒட்டி" என்ற சப்தங்கள் கலப்புடனும் கூடிய ஒரு மனிதன் திருநெல்வேலிக்காரன் என்று திண்ணமாய்ச் சொல்லலாம். இவ்விடத்திலுள்ள சைவ வெள்ளாளரோ தேக சுத்தத்திற்கும் சிவபூஜை நியமனத்திற்கும் பேர்பெற்றவர்கள். சியாழி முதலியார்களும் இம்மாதிரியே, உடையிற் படாடோபமில்லாமலும் நம்பிக்கைக்கு பாத்திரமானவனும் ஆனால் ஸாமர்த்யத்துடனும்கூடினவனுந்தான் தமிழ்தேசத்தவன்.

(இன்னும்வரும்)

# தூய்மை.

[Dr. C.R. Venkatnarayanan, L.M.&S, Dharmapuri.]

கடவுளின் குணங்கள் எட்டில் இரண்டாவதாய், தற்விக்கு முதன்மையாய், சுகவழிக்கு முக்யமாய், சமயங்களில் ஆசாரமென நின்று விளங்குவது தூய்மையாகும். இதை வடமொழியில் பரிசுத்தமென்று சொல்லுவார்கள். அப்பெயர் தன் பொருளோடு தமிழ்மொழியிலும் வழங்கப்படும்.

2. நமது வாழ்க்கை சுகம்பெற நம் அகம்வெளியாகிய மீனம், வாய், மெய், மட்டுமல்லாது நம்மைச்சுற்றிலுமிருக்குமிடம் பொருள் ஜீவராசிகளுக்கும் நாம் விரும்புவனமற்றெவற்றிற்கும் தூய்மை தேவை. படைப்பில் வெளிப்பட்டனவனைத்தும் இயற்கையாகவே தூய்மையுடையனவென்றே சமயங்கள் பலவும் கூறும். அக்காலத்துக்குப்பின் வருஷந்தோறும் தோன்றும் காலவேற்றுமையாலும் பொதுப்படையாகக் கூறப்படும் சீதோஷ்ணநிலையில் தோன்றும் மாறுபாடுகளாலும் இயற்கையிலுள்ளவை சில தூய்மை குன்ற நேரும். உயிருள்ள வாழ்க்கையில் ஏற்படும் அசுத்தம் பல. இதில் ஸ்தாவரராசிகளில் காண்பன சிலவே. மானிடர் முதல் கண்ணிற்குப் புலப்படா சிறு சிறு சிறு சிருமிகள் ஈருகவுள்ள ஜீவராசிகளின் கழிவுடை அசுத்தமே அதிகம். ஆயினும் இவை ஒவ்வொன்றும் தூய்மையுறும் வகை சாஸ்திரங்களில் ஏற்பட்டுள நீங்குவ மலங்கள் குறைந்து பிரிந்தவை உடனுக்குடன் சரிவர தூர நீக்கிப் பரிசுத்தப்படவிட்டு மற்றெவையும் அதிசுத்தமாக்கும் சட்டதிட்டங்கள் அடங்கும் நூலுக்கு தர்மசாஸ்திரம், ஆசாரக்கோவை, சுகாதாரவிளக்கம் என்ப்பெயர் பெறும் இக்கோட்பாடுகளின்படி ஒழுகுதல் தூய்மையுடைத்தாதலாகும்.

3. தோன்றும் அசுத்தம் நம் சுகவாழ்க்கைக்கு நேர் விரோதமானதால் அவைகளின் பிறப்பு, குணம், தொகுதி, அவைகளைப் பரிசுத்தம்செய்ய பொருள்வழி ஆராய்ந்தறிதல் தேக சௌக்யத்திற்கு இன்றியமையாதது.

4. ஞாயிறு ஒளி, அதி வெப்பம், எரிநெருப்பு, எக்காலும் தூய்மையுடையனவே. காற்று அசுத்தங்களின்மேல் வீச, பட, சேர அதன் சுத்தம் குறையும். சூரியவெப்பத்தினால் இலேசாய் மேல் மேல் செல்லச் செல்லவும்; அசைவுறாது நிற்குங்கால் அதனுடன் கலந்த அசுத்தவலிய பதார்த்தங்கள் தாழத்தாழவும்; மழைத்துளி, ஆலங்கட்டி வீழ்ச்சியாலும் வாய்வின் அசுத்தம் விலக்கப்படும். புற்பூண்டு, செடி கொடி, மரம் தழை, பச்சென்ற பாகங்கள் சூரியன் வெளிச்சம்பெற் அசுத்த ஆகாயம் உட்கொண்டு பின்னதைப்பிரித்து மாற்றி பிராணவாயுவை வெளியிடலாலும் வாயு பரிசுத்தமடையும்.

5. ஆவியாய் மாறி மேல்மேல் சென்று சுத்த ஆகாயத்தில் மேகமாய் மாறித்தங்கிய நீராவியே இவ்வுலகில் எளிதில் கிடைக்கும் பனிநீர் பெற்ற தூய்மை தீர்த்தமாம். ஆயினும் இந்நீராவி கொண்ட மேகம் குளிர்ச்சிபெற்று மழையாய் பெய்யுமிடத்து, இறங்கும் ஆகாயம் விழும் தரை, அருவி, கால்வாய், ஓடை, ஆறு, ஏரி, ஊற்றுகிணர் குட்டைகளாக ஓடி நிற்கவும் பெருகவும் பெருத்த நீர் நிலைகளையடையவும் கடல்சமுத்திரங்களையும் அடைந்தக்காலும் ஆங்காங்கு அசுத்தங்காணின் அவை பெறலியலும். அஃது காரணம்பற்றியே நம்முன்னோர் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரே நீர் நிலைவழிகளை அசுத்தப்படுத்தாது பாதுகாப்புக்கான தர்மம் போதித்துள்ளார். அசுத்தத்திற்கு காரணமாவோர்க்கும் கடினமான சிக்ஷை விதித்துள்ளார். அவ்வாறே இக்காலத்திலும் நற்சீர்பெறு நம் செங்கோல் இறைவராதரவில் நீர் நிலைகள் பாதுகாப்புக்கான சட்டதிட்டங்களும் தவறுதலுக்கு அபராதமும் கடின சிறைசிக்ஷைகளும் ஏற்பட்டுள.

6. நிலைநீர் அசுத்தமானால் தானாய் பரிசுத்தமாவதற்கு நெடு நாட்கள்செல்லும். வேறுவிதம் பரிசுத்தப்படுத்தினாலல்லாது சந்தேகத்திற்கிடமானதே. பருகலொண்ணாது. ஓடு நீரோ விரைவாயோடி பாரைகள்மேல் மோதி எதிர்த்து புரளப் புரள சுத்த ஆகாயத்தோடு கலந்து பரிசுத்தம் பெறினும் மண்பூண்டு பறவை எச்சம் காட்டு மிருகம் முதலியவைகளின் மலங்கள் பெற

இடமுண்டாதல்பற்றி அவைகளையும் சந்தேகப்பிரிவினுள்ளடக்கி
குடிநீராய் உபயோகிக்காது தடுக்கப்படவேண்டும். பானத்திற்கு
ரிய இயற்கை பனிநீர் சுத்த ஆகாயத்தின் வழியாய் விழும்மழை
நீர் சுகாதாரமுறையில் பாதுகாக்கப்பட்ட பிடிதரைமேல் விழுநீர்
பெறும் நிலைநீர், அசுத்தமான தரைநீர் இறங்காத ஆழ்ந்த கிணர்நீர்
ஆகியவைகளாகும். பின்னவை இரண்டில் மண் முதலிய கரையா
அசுத்தப்பொருள்கள் சேரலாகும். அவற்றை நீக்கப்பெற சுத்
தமாய் வடிகட்டி மூடிவைத்து சுத்தமான பாத்திரங்களில வார்
த்து பருகல் அவசியம். வேறுவித நீர் பொங்கவைத்து நீராவிர்
தீர்த்தமாக்க பரிசுத்தம் பெறும். அடுத்தது பொங்கவைத்து
வடிகட்டின நீராகும். ஆயினும் இவை சேகரிக்கும்முதல்பருகும்
வரை பரிசுத்தமாயிடல்வேண்டும். ஆங்கில சுகாதார சாஸ்திரங்
கள் கெடுநீரை குடிநீராகவும் மாற்ற பற்பலவகை பொருள்வழி
குறித்துள. வியாதி விளைவிக்கும் அசுத்தப்பொருள்கள் கலவு
படாததும் கடின உலோகம் மிக்க பலகலவா, இலேசான நீர்,
ஆடைதுவைக்கவும், பாத்திரம் துலக்கவும் உபயோகப்படும்.
இதைவிட கொஞ்சம் பரிசுத்தமான நீர் தண்ணீராகவும் வெந்
நீராகவும் ஸ்நானத்திற்கு உபயோகிக்கலாம். கால்நடை வீட்
டுப்பிராணிகளுக்கும் நமக்காகும் குடி, குளி நீர்கள்ா தனியே எடு
த்து முறையே குடிக்கவும் கழுவவும் உபயோகித்தலாகும்.
காற்றுக்குப்பின் தண்ணீர் உயிருக்கு முக்ய உணவாதலால் இவை
பரிசுத்தமாயிருக்கப்பெற உதவிக்கொள்ள வேண்டிய கடமையை
விவரித்து வரைதல் வேண்டுவதில்லை. இத்தகைய தண்ணீரை
யடுத்த கனத்த உணவாகும் உண்டியின் பரிசுத்தம் பின்
தொடரும். சுபம்! சுபம்!! சுபம்!!!

# தனிக்கவித்திரட்டு.

(தொடர்ச்சி)

[ஆசிரியர் பிரம்மஸ்ரீ நடராஜ ஐயரவர்கள் செவ்வாய்ப்பேட்டை செந்தமிழ்ச்சங்கத்தில் 'மாணிக்கவாசகர்' என்ற விடய மாகப் பிரசங்கித்தபோது பாடியது]

இருவிகற்ப நேரிசை வெண்பா.

21. மணிவா சகப்பெருமான் மாணிக்கச் சொற்க
ளணிபெறவே யெங்கட் களித்தான்—பணியாரும்
பொன்னம் பலத்தான் பொலிவமைந்த விச்சபையிற்
சன்மார்க்கஞ் சேர் நடராசன்.

[முன் டிப்டிகலெக்டராயிருந்து இப்போது அரிசியல் அமைச்சி ராயிருக்கும் திரு—டி. என். சிவஞானம் பிள்ளையவர்கள் திரு ச்சங்கோடு சைவசமாஜத் தலைமைவகித்தபோது ஷெ ஐரவர்கள் (கண்ணப்பர்) என்பது குறித்துச்சொற் பொழிவாற்றிய சமயத்துப் பாடியது]

இருவிகற்ப நேரிசை வெண்பா.

22. கண்ணப்ப னென்றுரைக்கின் என்னெஞ்சக்கல்லு [ருகும்
நண்ணு மவனன்பை நன்றாகத்—திண்ணியசீர்
மிக்க நடராசனெனு மேன்மையனே கூறுமெனின்
அக்கடற்குள் ஆழும் அகம்.

சென்னை இராஜதானிக் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரிய ராகிய மகாமகோபாத்தியாய வே—சாமிநாத ஐயரவர்கள் சங்கநூல் பலவற்றை உலகிற் கச்சிட்டுதேவிய பெருமையைவியந்து பாடியது.

இருவிகற்ப நேரிசை வெண்பா.

23. பண்டைத் தமிழ்நூல்கள் பாழடைந்து மாயாமே
கொண்டலென நாடிக் கொடுத்தளித்தான் கண்டுநிகர்
வாமத் தமிழ்க்கடலின் வாரி வரம்பிட்ட
சாமிநா தத்தலையாசான்.

# ஹாஸ்யத் தொகுதிகள்.

I. வினு:—ஏழுகோடி பொன் உடையவன் அதிக திருப்தியுடவனுயிருப்பானு? அல்லது ஏழு பெண்களைப்பெற்றவன் மிகவும் திருப்தியடைந்தவனுயிருப்பானு?

விடை:—ஏழு பெண்களின் தகப்பன் மிகவும் திருப்தியடைந்திருப்பான். ஏனெனில் தற்காலத்தில் பெண்ணைபெற்றவன் அதற்குத்தக்க புருஷனைத்தேடி வரதக்ஷணை முதலிய சிலவு செய்து அதிக கஷ்டப்பட்டு கடைசியில் மிகவும் வருந்தி தரித்திரனுவதால் அவன் இனி எனக்குப் பெண்களே வேண்டாம். போதும்! போதும்!! என்று தெய்வத்தை வேண்டி திருப்தியடைகிறுன்.

ஏழுகோடி பொன் உடையவன் திருப்தியடையாமல் 'ஓ கடவுளே! இன்னும் ஏழுகோடி பொன்வேண்டுமென்று பிரார்த்திக்கிறுன்.

II. தகப்பன்:—அடே பையா

மகன்:—யே அப்பா ங்கு

தகப்பன்:—டே

மகன்:—யேப்பா

தகப்பன்:—டே அவாத்து பிள்ளே படிக்கிறதே நீயும் படியேண்டா

மகன்:—உ....கூ....கூ (அழுதுக்கொண்டே) அவாத்துப் பிள்ளைக்கு தங்கக்காப்பு பண்ணிப்போட்டாளே எனக்குப்பண்ணிப்போட்டாயா? அவாத்துப்பிள்ளைக்கு களியாணம் பண்ணினுளே நீ யெக்குப்பண்ணினுயா

(அம்மாளவப்பார்த்து) மகன்:—யேம்மா, அப்பா இதெல்லாம் சொல்றுளே அவாத்துப்பிள்ளே அப்பம் வடை திங்கறதே எனக்கில்லையா

தாய்:—அடே கட்டெலேபோாவனே அவப்பாவுக்கு திவசம் அப்பம்வடை திங்கிறுன்

மகன்:—நம்மப்பாவுக்கும் திவசம் பண்ணு நானும் அப்பம்வடை தின்கிறேன்.

## காலஞ்சென்ற ஸ்ரீமான் P. சுந்தரம்பிள்ளையவர்கள்.

சேலம் லண்டன்மிஷன் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியராக இருந்த ஸ்ரீமான் P. சுந்தரம்பிள்ளை அவர்கள் சென்ற ஜூன்-மீ 17-உ இரவு இவ்வுலகை நீத்துச்சென்றது அவர் பந்துமித்ரர்களுக்கும் மாணவர்களுக்கும் மிக்க துயரையும் சேலம் ஜில்லா கல்வி இலாகாவிற்கு பெருத்த நஷ்டத்தையும் விளைவித்தது. இவர் சென்னையிற் பிறந்தவர். அங்கே செக்ரிடேரியட் ஆபீஸிலிருந்த ஸ்ரீமான் பொன்னம்பலம்பிள்ளை அவர்களது புத்திரராவர். இளமையிலேயே முறைப்படி கல்விபயின்று சென்னை கிருஸ்தவ கலாசாலையில் கனம் மில்லர் அவர்களது சீடராய் அமர்ந்து B. A. பட்டம் பெற்றனர். பிறகு செங்கற்பட்டு ப்ரீ சர்ச்மிஷன் ஹைஸ்கூலில் (Free Church Mission High School) மூன்று வருஷகாலம் தலைமை ஆசிரியராக இருந்தார். பின்னர் 1883 வருஷம் சேலம் லண்டன்மிஷன் ஹைஸ்கூலின் தலைமையை ஏற்றுக்கொண்டார். இப்பாடசாலையிலேயே 41 வருடகாலம் கண்ணியமாய் உழைத்து நற்கீர்த்தியுற்றனர்.

கனம் மில்லரவர்களது உயர்ந்த நோக்கங்களையும் தொழில் முறைகளையும் பின்பற்றி நடந்தனராதலால், சேல நகரில் இவர் சென்னையில் மில்லர்போல் விளங்கினார். தம் உதவி ஆசிரியர்களிடத்தும் பழையமாணவர்களிடத்தும் பயிற்சிபெற்று வருபவர்கள் பாலும், இதரர்களிடத்தும் நடந்துக்கொண்ட முறையும், மரணகாலம்வரை (78-ம் வயது) தளரா ஊக்கமுடன் பாடசாலை அபிவிருத்தியின் நோக்கமொன்றையே மேற்கொண்டவராய் உழைத்ததும், மிகவும் பாராட்டற் பாலது. யாவரிடத்தும் பக்ஷமாயிருந்தமையால் எல்லோரும் அவரிடம் அளவற்ற விசுவாசமுற்றிருந்தனர்.

முனிசிபல் கௌன்சிலராயும் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாயும் நடுநிலைமையுடன் தம் கடமையை திறமையுடன் செய்துள்ளார். பிரைமரி செகண்டரி பரிக்ஷை இலாகாவில் தலைமை வகித்து பரீக்ஷைகளை செம்மையாய் நடைபெறுவித்திருக்கின்றனர்.

சேலம் ஜில்லா வாலிபச்சாரணர் கௌன்ஸில், செகண்டரீ ஸ்கூல் கமிட்டி முதலியவற்றிலும் அங்கத்தினராயிருந்து காரிய நிர்வாகங்களில் பெரிதும் உதவியிருக்கின்றனர். மாணவர்களுக்கு பாடங் கற்பிப்பதில் நிகரற்றவர். ஏழைகளிடத்து பெரிதும் இரக்கம் காட்டுபவர். தமது ஜீவியகாலத்தில் பல எளிய மாணவர்களை முன்னுக்குக்கொண்டுவந்தவர்.

இவருக்கு ஒரு புத்திரரும் ஓர் புதல்வியும் உளர். எல்லாம் வல்ல ஈசன் இவருடைய குடும்பத்திற்கு ஆறுதல் அளிப்பதோடு நீடித்தகாலம் செல்வாக்குடன் விளங்கின அப்பாடசாலை விருத்தியடையுமாறு அருள்புரிவாராக.

சேலம் லண்டன்மிஷன் ஹைஸ்கூல் பழையமாணவரும் தற்போது அதிலேயே உதவி உபாத்தியாயராயிருப்பவருமான

கி. வரதராஜராவ்.

---

## மதிப்புரை.

"சசிகுலதீபம்"

[ஆசிரியர் ஸ்ரீமான் "வித்யா விநோத" காவிய விசாரத U. N. இராமசாமி நாயுடுகாரு உடுமலைப்பேட்டை]

பாரதநூலிற் பொதிந்துள்ள பரம இரகசியக்கருத்துக்களிற் சிலவற்றை நன்கு விளக்கிக் கதாபாகத்தினருமைகளையுஞ் செவ்வனே இந்நூல் விளக்கியிருக்கின்றது. இதுபோன்ற நூல்கள் நம் நாட்டிற்கின்னும் பெருகுதல்வேண்டும். இதனை நிகர்த்த நூல்களை வெளியிடுமாறு இந்நூலாசிரியர்க்கு பரமன் திருவருள் சுரப்பாராக.

படங்கள்! படங்கள்!!

# கார்டு சைஸ் படங்கள்.

தங்கள் தேவைக்கு விரைந்து எழுதுங்கள்.

இதுபோன்ற அழகிய லீலாவிநோதப் படங்கள் யாரும் வரவழைத்திருக்கமாட்டார்கள். இந்தப்படங்கள் தனியாய் பாரிஸ் பட்டணத்திலிருந்து வரவழைத்திருக்கிறோம். வெகு நேர்த்தியாய் பார்ப்பவர் மனதைக்கவரும் வண்ணம் பளபளப்பும் கலரும் கலரில்லாமலும் கூடிய கார்டு சைஸ் படங்கள்.

| | | |
|---|---|---|
| 1 நெ. | டஜன் 1-க்கு | 2—8—0 |
| 2 நெ. | .... | 2—0—0 |
| 3 நெ. | .... | 1—8—0 |
| 4 நெ. கலர் புஷ்பங்கள், குழந்தைகள் | | 1—0—0 |

பாக்கிங் போஸ்டேஜ் பிரத்தியேகம்.

விலாசம்: —

பி. எஸ். ராய், புதுவை.

---

## இனாம்! இனாம்!!

கீழேகண்ட சாமான்களில் ஒன்றை வாங்குபவர்கட்கு

பாரிஸ் வாசனைபுட்டி 1, பவுடர் டப்பி 1, துணியில் வைக்கும் வாசனை பொட்டளம் 1, முகத்திற்கு போடும் கிரீம் புட்டி 1. ஆகிய நான்கு சாமான்களும் அடங்கின பெட்டி ஒன்று இனாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மப்ளர் செண்டு | ரூ | 3—8—0 | லேபுளோர் | ரூ | 3—0—0 |
| ஓல்ட் செண்டு | ,, | 3—8—0 | எஸ்பி | ,, | 3—0—0 |

தீர்வை, பாக்கிங் போஸ்டேஜ், பிரத்தியேகம்.

இன்னும் அநேகவித செண்டுகள், சோப்புகள், பவுடர்கள் விலை சகாயமாய் சில்லரையிலும், மொத்தமாயும் கிடைக்கும். வேண்டிய தினுசுகளுக்கு விலை விபரத்திற்கு எழுதவும்.

ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால் இரண்டுவித வாசனை கார்டுகள் இனாமாக அனுப்பப்படும்.

ஜி. எஸ். ஏஜென்ஸி, புதுவை.

உ

# அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை.

இப்பெயர்கொண்ட செய்யுள் நூல் தளவாய்ப் பேட்டை அரங்கனாத கவிராஜராலியற்றப்பட்டுச் சமீபத்தில் வெளிவந்துள்ளது. இதில், அர்ச்சுனன் தீர்த்தயாத்திரைச் சிறப்பு, மும்மணமாண்பு, முகுந்தன் பெருமை, நதி, கடல், மலை, நாடு ஆதியவற்றின் சிறந்த வருணனை முதலியன மிக நன்றாகக் கூறப்பட்டுள்ளன. இதனைப்படிப்போர் பழந்தமிழ் நூல் எனவே இதனைக்கூறுகிற்பர் என்பது முற்றுந்தேற்றமாம். 1500 செய்யுள்கொண்ட இந்நூலின் விலை ரூபாய் 1—4—0 தான். ஒரேசமயத்தில் 12 பிரதிகள் வாங்குவோருக்கு ரூ. 1 வீதம் தரப்படும். வேண்டுவோர் கீழ் குறித்த விலாசத்திற் கெழுதிப் பெறலாம்.

இங்ஙனம்,
பண்டித ரா. திம்மப்ப ஐயர்,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர், முனிசிபல் காலேஜ்
வீரபத்திர சுவாமி கோயில் தெரு, சேலம்.

*Tel Address—"KADAR STORE"*
தந்தி விலாசம்—"கதர் ஸ்டோர்."

## ☞ அசல் கதர் ஜவுளிகள்!

எங்களிடத்தில் சொந்தப்பார்வையில் தயார் செய்த வேஷ்டிகள், ஷர்ட்டிங் கோட்டிங்கினுசுகளும், சீட்டி தினுசுகளும், பலவித கலர்களில் ஓரங்களில் சரிகை, பட்டுக்கரை முடிகள், சாதா வெள்ளை முடி அங்கவஸ்திரங்கள், சேலம் தினுசு பட்டு சரிகைகளால் செய்த பேட்டுக்கரை வேஷ்டிகளும், நூலினால் செய்த பேட்டுக்கரை வேஷ்டிகளும், துண்டுகளும், சேலைகள், தாவணிகள், தலைப்பாக்கள், தொப்பிகள், ஷால்வைகள், கைக்குட்டைகள், கொட்டடி, சாதா துண்டுகள், லுங்கி தினுசுகள், இன்னும் அநேக ரகங்களில் கிடைக்கும். வியாபாரிகளுக்கு விலை மிக்க சாசம்.

N. கோவிந்தராவ், கதர் ஸ்டோர், ஈரோடு.

Printed and Published by P. R. Srinivasan at
the Sanjivi Press, Dharmapuri.